# இந்தி எதிர்ப்புக் காரியக் கமிட்டி.

## தலைவர்பதவியை ராஜிநாமாச் செய்ததேன்?

### தோழர் பாரதியார் அறிக்கை

ஈரோடு 'விடுதலை'ப் பத்திராதிபர்
அவர்களுக்கு

ஐயா!

எனக்கு எதிர்பாராமல் குடலிறக்க நோயுற்றுச் சத்திரச் சிகிச்சை செய்து கொள்ள நேர்ந்தது. அதனால் 4—6—38 முதல் மூன்று வாரம் படுக்கையில் கிடக்கையும், அதன் பிறகும் மூன்று மாதம் வரை நடையில்லாமலும், மற்றும் அடி வயிற்றில் எவ்விதக் கனமும் தூக்காமல் இருத்தலும் இன்றியமையாதென்று மருத்துவர் ஆணை தந்ததால், 4-6-38 அன்றே தமிழர் சங்க அமைச்சர், தோழர் விசுவநாதன் அவர்களுக்கு என் நிலைமையை அறிவித்துள்ளேன். சென்னை நண்பருக்கும் தெரிவித்தேன். "கட்டாய இந்தி" எதிர்ப்புப் போரில் நேரிய சமாதான முறையில் நான் பங்கெடுக்க விரும்பியபடி என் நோயுற்ற உடல் நிலையில் முடியாமலிருப்பதால், அவ்வறப் போர் நடத்தும் வினையாளர் கழகத் தலைமையை நான் வகிப்பது தவறெனக்கருதி, அதனின்றும் என்னை விடுதலை செய்ய வேண்டி ஒரு விண்ணப்பமும் அனுப்பினேன். ஆனால் உடல் நலம் என்னை வெளியேறி வேலை செய்யவும், அதனால் வரும் தீமைகளை நன்மையாக ஏற்கவும் இடந்தந்தவுடனே இம்மெய்யறப் போரில் கலந்து கொள்ளத்தாழேன். எனின், என்கூடா உடல்நிலையை அறியாப்பலரும் நான் வாளா விலகியது போலத் தவறாகக் கருதுவது இயல்பாகும். காந்தி பற்றியும், கனம் மந்திரிமார் திருவுள்ள வெளியீடுகள் பற்றியும் எழுதிய கடிதங்களை "மெயில்" முதலிய சென்னை நாட்செய்திப் பத்திரிகைகள் வெளியிடாமல் மறைத்தும் "ஹிந்து" பத்திரிகை வேண்டியபடி குறைத்தும் விட்டதனால் தமிழன்பருக்குத் தன்மை அறியக் கூடாமலிருக்கிறது. சில நண்பர் எனக்கு நேரில் எழுதிக் கேட்டும் வருகின்றனர். அதனால் தாங்கள் அன்புகூர்ந்து இதைத் தங்கள் தமிழ் தொண்டுப் பத்திரிகையில் தாழாமல் வெளியிட்டுதவுக.

உண்மையுள்ள,
தமிழ்த் தொண்டன்,
சோமசுந்தர பாரதி.

அண்ணாமலைநகர்.